**செய்தி வெளியீடு எண்: 141** **நாள்: 23.02.2018**

# கிரெடாய் அமைப்பின் சார்பில் இன்று (23.2.2018) சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நடைபெற்ற FAIRPRO 2018 வீட்டுவசதி கண்காட்சியை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை

***

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை
வணங்குகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர்
திரு எஸ். கிருஷ்ணன் அவர்களே!

அரசு உயர்அதிகாரிகளே!
கிரெடாய் அமைப்பின் நிர்வாகிகளே

உங்கள்அனைவருக்கும் எனது வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரெடாய் அமைப்பின் சார்பில் நடத்தப்படும்
FAIRPRO 2018 வீட்டுவசதி கண்காட்சியை
தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நகரங்கள்
பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் இந்திய அளவில்
மொத்த மக்கள் தொகையில் சுமார் 31 விழுக்காடு
மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான
7.2 கோடி பேரில் 48.45 விழுக்காடு மக்கள்
நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர்.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில்
நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தொகை
விகிதாச்சாரத்தில் பெரிய மாநிலங்களில்
தமிழ்நாடு முதலிடத்திலும், ஒட்டுமொத்தமாக
மூன்றாவது இடத்திலும் உள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீத பேரும், நகர்ப்புற மக்கள் தொகையில் 9.6 சதவீத பேரும் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர்.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானதாக விளங்கும் உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் எண்ணற்ற பயன்களை பெறும் வகையில் தேவையான அனைத்து திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதி வளர்ச்சியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் வழிகாட்டுதல்படி செயல்படும் அம்மாவின் அரசும்  ஏற்படுத்தி வருகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தமிழ்நாட்டில்,  குறிப்பாக சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு பல பன்னாட்டு நிறுவனங்கள் நமது மாநிலத்தில் தங்களது நிறுவனங்களை நிறுவியுள்ளனர் என்பது நாம் எல்லோரும் பெருமை படத்தக்கதாகும்.

சென்னை மாநகர், தமிழ்நாட்டின் தலைநகரம் மட்டுமின்றி, ஒரு பன்னாட்டு நகர் [Global City] என்ற பெருமையை பன்நெடுங்காலமாக பெற்றுள்ளது.

உலக வங்கி மற்றும் பல பன்னாட்டு வங்கிகள் தங்களது அலுவலகங்களை சென்னையில் அமைத்துள்ளது, அதற்கு சான்றாகும்.

உலகத்தரம் வாய்ந்த மருத்துவ வசதி கொண்ட நகரமாகவும் சென்னை விளங்குகிறது.

அதனை ஊக்கப்படுத்த தமிழ்நாடு அரசு மருத்துவ மனைகளுக்கு 0.25 ஊக்க தளப்பரப்பளவு சலுகை அளித்துள்ளது.  சென்னை மட்டுமின்றி, அனைத்து நகரங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டும்,  அதன் வளர்ச்சியை தொடர்ந்து

நிலைநாட்டும் பொருட்டும், மாண்புமிகு அம்மாவின் அரசு
பல உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான திட்டங்களை
வகுத்து செயல்படுத்தி வருகிறது.

அவ்வாறு நடைமுறைபடுத்தப்படும் திட்டங்களில்
சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக
இருக்கும் என நான் கருதுகிறேன்.

**வீட்டு வசதியைப்** பொறுத்தவரை, தமிழ்நாடு வீட்டுவசதி
வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
வழியாக குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும்
நலிந்த வருவாய் பிரிவினர் பயனடையும் வகையில்,
வீட்டுவசதி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத்துறை மற்றும்
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மூலமாக
தத்தமது பகுதிகளுக்கு முழுமையான திட்டம்
தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட பகுதிகளில்
அனுமதிக்ககூடிய நில உபயோக பயன்பாடு
வகைபடுத்தப்பட்டு, சீரான நகர வளர்ச்சிக்கு வழிவகை
செய்யப்பட்டுள்ளது. உரிய வளர்ச்சி விதிமுறைகள்
அறிவிக்கப்பட்டு, நில உபயோகப்பகுதிக்கு தகுந்தவாறு
கட்டுமான பணிகள் அனுமதிக்கப்படுகின்றன.

சிறப்பு கட்டடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட
15 மீட்டர் கட்டிட உயரத்தை தளர்த்தி
17 மீட்டராக மாற்றப்பட்டு
நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

கட்டடம் கட்டுவதற்கு திட்ட அனுமதி விண்ணப்பங்கள்
கணினிவழியாக பெறப்பட்டு,
விரைவாக திட்ட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டும் என்பதை
ஏற்கனவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.
நானும் தெரிவிக்கின்றேன். நீங்கள் வைத்த கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கான
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இம்முறையை மேலும் செம்மைபடுத்த
இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின்
(Indian Institute of Technology – Madras)
ஆலோசனையுடன் மென்பொருள் தயாரிக்கும் பணி
மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், முதற்கட்டமாக, தொழிற்சாலைகளுக்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் ஒற்றை சாளர முறையில் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, விரைந்து திட்ட அனுமதி வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

அனைவருக்கும் வீடு என்ற நிலையை அடைய, தனியாரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். தனியார் துறையின் பங்களிப்பை, ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் பல தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது.

தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகரிக்க, ஊக்கத் தளப்பரப்பளவு அனுமதிக்கப்படுகின்றது. மேலும், குறைந்த வருவாய் பிரிவினருக்கு வீட்டு வசதியினை உருவாக்கும் நோக்குடன் – தேவைப்படும் முதலீட்டை ஏற்படுத்த, உறைவிட நிதி (Shelter Fund) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான ஏழை எளியோர், அவர்களுடைய வாங்கும் திறனுக்கு ஏற்றவாறு வீடு கட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனைகளை வாங்கியுள்ளனர். அவர்களுடைய நலனை பாதுகாக்கும் வகையில் அம்மனைப்பிரிவுகளை வரன்முறைபடுத்திக் கொள்ளும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மாவின் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
இதனால், அம்மனைகளில் வீடு கட்ட அனுமதியும், வங்கிகளில் கடன் வசதி பெறவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் சொந்தமாக எளிதில் வீடு வாங்கி குடியிருக்க வழிவகை செய்யும் நல்லெண்ணத்துடன் **மாண்புமிகு அம்மா** அவர்கள், அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 லட்சம் ரூபாய் என்றிருந்ததை 25 லட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்தார்கள்.

நகர்ப்பகுதிகளின் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சாலை இணைப்புகளை முறையாக மேம்படுத்தவும், வெளிவட்ட சாலை, பின்னல்வலை சாலைகள் போன்ற திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. குறிப்பாக, வெளியூரிலிருந்து வரும் பேருந்துகளால் உருவாகும் நெரிசலை குறைக்க சென்னை மாநகரின் தெற்கு பகுதியில் கிளாம்பாக்கத்தில் அதிநவீன வசதிகளுடன் பேருந்து முனையம் அமைக்கும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதே நோக்கத்துடன் சென்னையின் வடக்கு பகுதியில் மாதவரத்திலும் பேருந்து முனையத்திற்கான கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுபோன்ற மேலும் பல திட்டங்களை நிறைவேற்றி, வீட்டு வசதி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு அம்மாவின் நல்ஆசியோடு செயல்படும் இவ்வரசு தொடர்ந்து தனியார் துறையினரின் பங்களிப்பை ஊக்குவிக்கத் ஆவன செய்யும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வீட்டுவசதி கண்காட்சி வீடு வாங்குவோர் அனைவரும் பயன்படும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த கண்காட்சியில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் பங்கு பெறுவதால், பொது மக்கள் தங்களுக்கு ஏற்ற வீடுகளை வாங்கவும், வீடு சம்பந்தப்பட்ட விவரங்களை அந்த நிறுவனங்களிடமிருந்து ஒரே இடத்தில் பெற முடியும். மேலும் வீட்டுவசதிக் கடன் வழங்கும் நிதிநிறுவனங்களும் இந்த கண்காட்சி அரங்கிலே இருப்பது கூடுதல் வசதியாகும், பாராட்டுக்குரியதாகும்.

இந்த கண்காட்சியினை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள பொதுமக்களைக் கேட்டுக் கொண்டு, இந்த நிகழ்வினை சிறப்பான முறையில் நடத்திய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**